மாலை மணி

Regd. No. 5458
Phone: 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர் : கே. ஜி. இராதாமணாளன்

மாலை 4 | சென்னை 25-7-54 | மணி 35

அண்ணாதுரைக்கு காமராஜர் கடிதம்!

ரெவின்யூ வசூல் சட்டம்

சிறைப் படுத்தும் பிரிவு செல்லாது

உயர்நீதி மன்றத் தீர்ப்பு

சென்னை, ஜூலை, 24—

சென்னை ரெவின்யூ வசூல் சட்டத்தின் 48-வது பிரிவு, அரசியல் சட்டத்தின் 22 (1) (2) பிரிவுகளுக்கு முரணாக இருப்பதால் அது செல்லத்தக்கதல்லவென்று நேற்று சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது,

ரெவின்யூ வசூல் சட்டத்தின் 48 வது பிரிவின்படி ஜில்லா கலெக்டர், ரெவின்யூ பாக்கிக்காக ஒருவரைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கவும், சிறை செய்யவும் அதிகாரம் அளிக்கிறது. கலெக்டர் இத்தகைய நடவடிக்கை எடுக்க வருமான வரிச் சட்டம் 46 (2) பிரிவு அதிகாரம் அளிப்பதால், அதுவும் செல்லாது என்றும் தீர்ப்பு கூறப்பட்டது.

கண்ணனூரைச் சேர்ந்த இப்ராஹிம் என்பவர், ரூ. 61,668 வருமான வரி பாக்கிக்காகச் சிறைப்படுத்தப் பட்டார். அவரது விடுதலை மனுவின் மீது தான் மேற்கண்ட தீர்ப்பு கூறப்பட்டது.

கல்யாணசுந்தரத்தின் குற்றச்சாட்டு

ஆதாரமற்ற பேச்சுக்கு பொதுமக்களின் ஆத்திரம்

திருச்சி கூட்டத்தில் குழப்பம்

திருச்சி, ஜூலை, 24—

நேற்றைய முன் தினம். 22–7—54 புதன்கிழமை மாலை 6 மணிக்கு பொன்மலை ரெயில்வே திடலில் தொழிலாளர் கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு ரெயில்வே தொழிலாளர்கள் பெருவாரியாக வந்திருந்தனர்.

கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ் கட்சி பிரமுகர் தோழர் கல்யாண சுந்தரம் தொழிலாளர்களின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் தற்கால அரசியல்நிலையைப் பற்றியும் பேசிக் கொண்டே வந்தவர்-திடீரென தி. மு. கழகத்தின் போக்கைப் பற்றி பேசமுற்பட்டு சமீபத்தில் காமராஜ நாடாரும், அண்ணாதுரையும் சந்தித்த போது குடியாத்தம் தேர்தலில் தம்மை அண்ணாதுரை ஆதரிக்காவிடில், தி. மு. கழகத்தை அடக்கு முறையால் ஒழித்துக் கட்டி விடுவதாக மிரட்டினார், அதற்கு பயந்து அண்ணாதுரையும் தி மு கழகமும் குடியாத்தம் தேர்தலில் காமராசரை ஆதரிக்க முன்வந்திருக்கின்றனர்" என்று கூறியதும் கூட்டத்தில் இருந்த ரெயில்வே தொழிலாளியும்—திருச்சி தி. மு, கழகச் செயலாளருமான தோழர் பராங்குசம் அவர்கள் எழுந்திருந்து கல்யாண சுந்தரத்தை நோக்கி தாங்கள் அண்ணாதுரை அவர்களையும் கழகத்தைப் பற்றியும் கூறிய வார்த்தைகள் உண்மையற்ற முழுப் பொய். இதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்" என்றும் அமைதியான முறையில் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பாராங்குசத்தின் கேள்வி நியாயமானது. கல்யாண சுந்தரம்-அதற்குத் தகுந்த அத்தாட்சியுடன் பதில் சொல்ல வேண்டுமென்று கூட்டத்தில் இருந்த பெருவாரியான மக்கள் வற்புறுத்தினார்கள். தோழர் கல்யாணசுந்தரம் இதற்கு எந்த வித பதிலும் கூறாமல் மேலும் தொடர்ந்து பேச ஆரம்பித்ததும்-கூட்டத்தில் இருந்த தொழிலாளர்கள் "அவர் பேசக்கூடாது. முதலில் பதில் சொல்ல வேண்டும். அண்ணாதுரையைப் பற்றி கூறிய வார்த்தைகள் யாவும் உண்மையல்ல, ஆகவே கூறிய வார்த்தைகள் வாபஸ் பெற்று மன்னிப்பு கேட்வேண்டும்என்று கூச்சலிட்டனர். ஆனால் தோழர் கல்யாணசுந்தரம் மேலும் பேச ஆரம்பித்ததும் கூட்டத்தினர் அமைதியை இழந்து ஆத்திரமடைந்தனர். மேலும் கூட்டம் தொடர்ந்து நடைபெறாமல் போகவே போலீசார் தலையிட்டு அமைதியை நிலைநாட்ட முற்பட்டனர்,

கல்யாண சுந்தரத்தின் செய்கையைக் கண்டிக்கும் அறிகுறியாக பெருவாரியான தொழிலாளர்கள் கூட்டத்தை விட்டு வெளியேறினார்கள்,

மற்றொரு கூட்டத்திலும் அமளி

நேற்றைய முன்தினம் இரவு திருச்சி குருவியன் குளம் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் தி. மு கழகத்தைத் தாக்கி பேச முற்பட்டதும் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது, கூட்டம் அமைதியாக நடைபெறாமல் போகவே கூட்டத்தைக் கலைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு கலைக்கப்பட்டது.

டிராம் சொத்துக்களை விற்க

கம்பெனி நிர்வாகிக்குத் தடை !

உயர் நீதி மன்றத் தீர்ப்பு

சென்னை, ஜூலை 24—

சென்னை டிராம்வே கம்பெனியின் சொத்துக்களை மாற்றவோ விற்கவோ கூடாது என்று கம்பெனி நிர்வாகியான பி. ஜி புருக்சுக்கு இன்று உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

டிராம் கம்பெனி சொத்துக்களைப் புருக்ஸ் ஹாஸனலி கம்பெனியைச் சேர்ந்த . தியாபலி போதர் பாய் என்பவருக்கு குறைந்த விலைக்கு விற்க முயன்றதாக நடந்த விசாரணையின் மீது மேற்கண்டபடி தீர்ப்பு கூறப்பட்டது,

டிராம் சொத்துக்களை அப்புறப்படுத்தச் செய்யப்படும்முயற்சிகள் ஏதும் செய்யக் கூடாதென்றும் அப்படிச் செய்தால் நஷ்டஈடு தரவேண்டும் என்றும் கம்பெனிக்கு எதிராக வாதாடப்பட்டதாம்.

இலங்கை இந்தியர் வெளியேற்றம்

இந்தியத் தூதுவரே பொறுப்பாளி

இலங்கைத் தலைவர் சாட்டை

கொழும்பு, ஜூலை. 27—

இலங்கை இந்தியர் வெளியேற்றப்படுவதற்குக் காரணம் இந்தியத்தூதுவர் அந்தஏற்பாட்டிற்கு சம்மதம் தெரிவித்ததேயாகும். இந்த வருந்தத்தக்க எற்பாட்டிற்கு உடன்பட்டதால் பல மக்களின் துயரத்திற்கு இந்தியத் தூதர் பொறுப்பாளியாகிறார் என்று இலங்கைத் தலைவர் தோழர் இராமலிங்கம் அவர்கள் நேற்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்,

இலங்கை சர்க்காரை குறை கூறிக்கொண்டே இந்த வெளியேற்றத்திற்கு இந்தியத் தூதர் மனமொப்பியது மிகவும் வருத்தமுற வேண்டிய செயல் என்றும் அவர் இடித்துக் காட்டினார்.

இலஞ்சம் வாங்கியதாக...!

மத்ய சர்க்கார் அதிகாரி மீது வழக்கு !

புதுடில்லி, ஜூலை, 24—

மத்ய சர்க்கார் மாஜி செய்தி இலாகா உதவி அதிகாரியான ஜி. ஆர். வெங்கடராமன்மீது ரூ. 458—10—0 இலஞ்சம் வாங்கியதாக டில்லி உயர்நீதி மன்றத்தின் விசேஷ நீதிபதி முன் ஒரு வழக்கு தொடரப்பட்டிருக்கிறதாம்.

சூயஸ் கால்வாய் பிணக்கு

இலண்டன்: ஜூலை 23—

சூயஸ் கால்வாய் பிணக்கு குறித்து பேச்சு வார்த்தை நடத்த பிரிட்டனின் யுத்த மந்திரி அந்தோணி ஹெட் இன்றிரவு கெய்ரோவுக்குப் பயணமாவார் என வெளிநாட்டிலாகாவின் செய்தி ஒன்றின் மூலம் அறியப்படுகிறது,

பேரளத்தில் மறியல்

மாயூரம், ஜூலை 23—

கடந்தசில தினங்களாக பேரளம் புகைவண்டி நிலையத்தில், பிரஞ்சிந்திய இணைப்பு ஆதரவாளர்கள் மறியல் செய்து வருகின்றனர்

ஆசிரியருக்கு முடங்கல்

தினத்தந்தியைத் தீண்டோம்!

‘அவள்’—‘இவள்’ பாஷை வேண்டாம்

ஆதித்தனுக்கு அறைகூவல்!

ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா, நாங்கள், மாலைமணியைத் தொடர்ந்து படித்து வருகிறோம் அதில் தாங்கள் ‘தினத்தந்தியின் தகாத போக்கினைக்கண்டித்து எழுதியதையும் கண்டோம் இதுவரையில் நாங்கள் தினத்தந்தியைப் படித்து வந்தோம் அண்மையில் நடந்த ‘குருவிக்கரம்பை’ நிகழ்ச்சி பற்றி, தாங்கள் விளக்கம் தந்தது பற்றியும், நாங்கள் உள்ளன்புடன் வரவேற்றோம் எனவே, நாங்கள் இன்று முதல் ‘தினத்தந்தியை’த் தொடமாட்டோம் என முடிவு செய்துள்ளோம்.

இங்ஙனம்,

நெ. 82, சாலைவிநாயகர் கோவில் தெரு, தோழர்கள்

என். ஆர் ஜி. விந்தன்
அறிவுச்சுடர்
மு. மனோகரன்
நா. ராமதாஸ்
கா வி இராதாமணாளன்
த து இளஞ்சேரன்
கா மு சீனிவாசன்
ஏ எழுமலை
கே எம் நெடுமாறன்
கா சி இராமலிங்கம்
டி கோவிந்தன்
எஸ் மாரியப்பன்

ஃ ஃ ஜீ

அன்புள்ள ஆசிரியருக்கு

பத்திரிக்கை மக்கள் சமுதாயத்திற்கே ஒளிவிளக்கிற்கு ஒப்பானது வானொலியும் செய்தியைத் தெரிவிக்கிறது ஆனால் எல்லா மக்களும் வானொலி முன்னின்று உலக நிகழ்சியறிய வாய்ப்பு பெற்றாரில்லை தினத்தாளென்றாலோ ஓரணா விலையில் இலகுவில் பெற்று வசதியுள்ள நேரத்தில் பார்த்துக் கொள்ளலாம் இது பத்திரிகை நலமும் பலனும் ஆகும் இத்துறையில் புகுந்து கொண்டு நம்பி படிக்கும் மக்களுக்கு ஏமாற்றம் செய்யும் வகையில் தினத்தந்தி செய்திகளைத் திரித்தும், கற்பித்தும் வெளியிட்டு வருவது மனிதனுடைய பகுத்தறிவையே கேலி செய்வதாகும் மிருகங்கள் பத்திரிகை நடத்துவதில்லை இப்படி பலமுறை ஈனத்தனமாக அதன் ஆசிரியர்கள் வெளியிடுவது கண்டு தி மு க தலைவர்கள் கண்டித்தும் அது திருந்தியபாடில்லை வயிற்றைக் கழுவ எத்தனையும்செய்யலாமா? அதற்காகஇவ்வாறு நடக்க வேண்டியதில்லை அந்த முற்போக்காளர் இது பத்திரிகை உலகையே கேலி செய்வதாகும் பிறநாட்டான் கண்டால் சிரிப்பான் அது மட்டுமல்ல ரஷ்யா சென்று இதைத்தான் கற்று வந்தாரோ என்று ஐயுறும் அளவுக்கு, திரு, திருமதி, திருவாளர் பெருமாட்டி என்ற உயர்திணை பால் (Gender) அடைமொழிச் சொற்கள் இருந்தும் பெண்ணினத்தை, அவமானம் செய்வது போல் போனாள் வந்தாள் பெற்றாள், என்று இந்த பார்அட்லா பட்டதாரி போடுவது தமிழகத்திற்கே இழுக்குண்டாக்குவதாகும் இப்படி இவர் லலிதா ராமேஸ்வரத்தில் நீராடினாள் என்று விளக்குபிடித்துக் கொண்டு செய்தி சேகரித்து போடுவதற்காக தாங்களும் ஆதித்தன் மனைவி வாசலில் நின்று கொண்டிருந்தாள், மகள் மார்கட்டிற்குப் போனாள் என்று போட்டு அவருக்கு பாடங் கற்பிக்கவேண்டவில்லை நாங்கள் தக்க நடவடிக்கை மூலம் அறிவுறுத்துங்கள்; இனிதினத்தந்திவாக்கை எவரும் நம்பவேண்டாம் தினத்தந்தி பத்திரிகைகளை ஒருநாள் மக்கள் மத்தியில் ஊர்வலமாக சென்று எரிப்பதன்மூலம் பகிஷ்காரம் செய்து கண்டனத்தைக்காட்டி பொது மக்களும் உணர்ந்துகொள்ளச் செய்ய அறிஞர் அண்ணா ஆணையிடுவாரா என்று இதன்மூலம் எதிர்பார்க்கிறோம்.

மதுரை 22 7 54 } சே சி இராமசாமி
சி இராசமாணிக்கம்
சு சிவப்பிரகாசன்

குத்தூசியாரின் கோணல் புத்தி!

குக்கல் குருசாமியார் குலைக்கிறார்!!

ஐயா,

வீடுதலையின் விஷமத்தனமும் வேடிக்கையும் நிறைந்த தலையங்கம் கண்டேன். இஞ்சி தின்ற குரங்கு போன்று கேட்பார் அற்று கிடக்கும் இந்த, அப்பாவி குருசாமி; கலைஞர்கள், நகைச்சுவை மன்னர்கள், கல்லூரிகளில் பேசுவதைக் கண்டு காய்கிறார், பாவம்! மூலையில் குந்தி முக்காடு போட்டு முகாரி ராகம் பாடும் மூக்குடைந்த முத்தண்ணா (குருசாமி) படித்த பட்டாதாரிகளைத் தற்குறியாகவும் இவர் தான் எல்லா வற்றையும் மிஞ்சி விட்ட மேதாவி போன்றும் முன்னுக்குப் பின் முரணாக எழுதியிருக்கிறார். வேறு யார் செய்தாலும் பரவாயில்லை அறிஞர்களா இப்படி செய்வது என்கிறார். யாருக்கும் இல்லாத அக்கரை இவருக்கு மட்டும் நம் மீது இப்படி ஏன் திடீர்காதல் (கனிவு) பிறந்தது என்றால் அங்குதான் தெரிகிறது குருசாமியின் கோணல் (பொறாமை) புத்தி

ஜோதிடர்கள் எதற்கெடுத்தாலும் பஞ்சாங்கத்தைப் புரட்டுவது போல, கம்யூனிஸ்ட் காம்ரேட்டுகள் காரல் மார்ஸின் தத்துவத்தை புரட்டிப்பார்த்து இது இருக்கிறது, இது இல்லை எனகிறார்களேஅதுபோலதோழர் குருசாமியும் அரசியல் சட்டத்தைப் புரட்டிக்காட்டுகிறார். அரசியல் சட்டம் காணாத அரிச்சுவடிகளுக்கல்லவா இந்த போதனை தேவை? அரசியல் சட்டம் நாம் காணாதது அல்ல, அரசியல் சட்டத்தினால் என்ன முடியும் என்று ஆர்ப்பறித்தீரே; அன்று கம்யூனல் ஜி. ஓ. ஒழிக்கப்பட்டபோது அரசியல் சட்டத்தையே கொளுத்துவோம் என்றீரே, அந்த அப்பழுக்கில்லா அறிவு எங்கே போயிருந்தது அப்பொழுது? அரசியல் சட்டப்பிரிவும் கவர்னர் சம்பளமும் எங்களுக்குத் தெரியாதது அல்ல கவர்னர் சம்பளம் சட்டப்படி மாற்றப்படாவிட்டால் அரசியல் சட்டத்தையே மாற்றுமாறு கிளர்ச்சி செய்வோம் என்பது ஞாபகமிருக்கட்டும். “கிளர்ச்சி” என்று சொல்லி ஒருநாள் கூத்து ஆடுபவர்கள் அல்லர் நாம்!

கவர்னர் சம்பளம் ரூ, 5500 அதில் காலணாகூட குறைக்க யாருக்கும் அதிகாரம் இல்லை என்று கூறிய விடுதலை, அதே நேரத்தில் 500 ரூபாய் குறைத்தால் பரம திருப்தியாம் என்று கேலி பேசுகிறது. காலணா குறைக்க ராஷ்டிரபதிக்கே உரிமை இல்லை என்றால் எல்லா சட்டத்தையும் மீறி விடுதலையின் கணக்குப்பிரகாரம் ரூ 500 குறைக்குமாறு கிளர்ச்சி செய்வதென்றால் இது என்ன சிறுப்பிள்ளைத்தனமா? பாவம்! குருசாமியார் பி ஏ பட்டாதாரி ஆயிற்றே; அவரா இப்படி எழுதுவது! வருத்தப் படுகிறோம். தோழர். ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவதைக் கண்டு அடுத்து திராவிட நாடு பிரிவினைப்பற்றி கூறுமிடத்து அய்-நா சபையாலோ சட்டசபையாலோ நாடு பெறமுடியாது என்று மறைமுகமாக கிண்டல் செய்கிறார் ஆனால் பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள், விடுதலை ஆபீசிலிருந்து பெரியார் வீட்டு வரை பேசிவிட்டாலோ அல்லது குஞ்சிதமும் குருசாமியும் ஊஞ்சலில்அமர்ந்து உல்லாசமாக பேசி விட்டாலா திராவிட நாடு கிடைத்துவிடப் போகிறது? என்று. பாவம் மக்களை நம்பி மேடைக்கு வந்தார் ஆனால் மக்களோ இந்த மகானின் பேச்சையும் எழுத்தையும் கண்டு ஆனந்தத்தால் தூக்கி (பொது வாழ்விலிருந்து) எறிகிறார்கள். தவைக்குதவாதகாரணம் காட்டி கண்மூடித்தனமாக பேசும் கலைஞரே, மறந்து விட்டேன், உங்களுக்கு யாரும்தான் ஒரு பட்டமும் கொடுக்கவில்லையே; இனியாகிலும் பெரியாரிடம் சொல்லி ஏதாவது போடச் சொல்லும். இனியாகிலும் பொறுப்புடன் (பொறாமை இன்றி) பேசும் கடைசியில் ஒரு வார்த்தை காமராசரை தி. க. ஆதரிக்கிறது என்பதற்காக தி. மு, க. ஏதோ கிளர்ச்சி செய்து காமராசரை ஒழிக்கப் பார்க்கிறது என்று ஒப்பாரி வைத்திருக்கிறது குத்தூசி! தி. க. தான் காமராசரைத் தாங்கிப்பிடித்திருக்கிறது என்று குருசாமியார் கூறுகிறாரா காங்கிரஸ்காரர்கள் காரித்துப்புகிறார்கள் இந்தக்கயவர்களின் திடீர்கொள்கை மாற்றத்தைக் கண்டு? காமராசரை நீயும்தான் தம்பி கண்டாய்-நாங்களும் தான் கண்டோம் பரிந்து பேசினால் காங்கிரசின் ஆதரவு கிடைக்கும் என்பதாலா இந்த அற்பவாதம்?

தமிழ்நாட்டுப் பொது வாழ்க்கையில் 100க்கு 100 பித்தலாட்டக்காரர்கள் என்கிறார் முட்டாள்களில் முதலிடம் பெற்றவர் பொதுமக்களை ஏமாற்றி பிழைப்பவர்களில் தானும் ஒருவன் என்பதை வெளிப்படையாக வெட்கமின்றி வெளியிட்டிருக்கிறார்! சிறு பிள்ளைகள் செய்யும் செயலுக்கா இப்படி கூப்பாடு போடுவது? குக்கல் குருசாமியாரே குலைக்காதீர்!

காசிராசன் சென்னை-5

கடந்த 22-ந்தேதி வாலாஜாபாத் வள்ளலார் மாணவர் இல்லக் கட்டிட கால்கோள் விழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படமே மேலே காணப்படுவது. படத்தில், சர். ஏ. இராமசாமி, டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி கஜபதி நாயகர், வா. தி. மாசிலாமணி ஆகியோரைக் காணலாம்.

மயிலையில் அண்ணா

சென்னை, மயிலை கபாலீஸ்வரர் சன்னதித் தெருவில் 25-7-54 ஞாயிறு மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார். நாகூர் அனிபா இன்னிசை வழங்குவார்

சைதையில் சம்பத்

சென்னை சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோயிலுக்கருகில் 26-7-54 மாலை 6 மணிக்கு எஸ். ஆர். வேலன் தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். அப்பாவு பி. அண்ணாமலை, க. முருகேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

“புதுவாழ்வு”

திருச்சி ஜூலை 23—

திருச்சி மாவட்ட மன்ற கல்விக்குழு உறுப்பினர் திருமதி சந்திராபிச்சமூர்த்தி அவர்கள் ‘புதுவாழ்வு’ என்ற பத்திரிகையின் பதிப்பாசிரியராகத் தம்மை இன்று திருச்சிஜில்லா மாஜிஸ்டிரேட்டின் முன்பாகப் பதிவு செய்து கொண்டார்.